# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்

## முன்னிலை :- திரு. S.ஜோதிகைலாஷ், B.A.,B.L.,(கூ.மு.பொ)

**2026ஆம்** ஆண்டு **ஜூன்** மாதம் **09ஆம்** நாள் **செவ்வாய்கிழமை**

**கருங்கல் காவல் நிலையக் குற்ற எண். 142/2026**

இல்

குற்றவியல் பல் வகை மனு எண் **432/2026 (Crl.M.P)**

பொன்பாண்டிதுரை (வயது 45/2026) .........மனுதாரர்/தடயபொருள் உரிமையாளர்
த/பெ. இசக்கிமுத்து

// எதிர் //

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், .......... எதிர்மனுதாரர்
**கருங்கல்** காவல் நிலையம்

சட்ட பிரிவுகள் : **பாரதீய நியய சன்கீதா பிரிவு 303(2) r/w 21(4) MMDR Act**

இம்மனு **04.06.2026** தேதியில் பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா பிரிவு 497ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு இன்று என் முன் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இவ்வழக்கில் மனுதாரர்/ தடயபொருள் உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த **வழக்கறிஞர் திரு.S.வரதராஜன்** அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை ஆராய்ந்தும், இன்று **09.06.2026** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுதாரர் பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா பிரிவு 497ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில், **கருங்கல் காவல் நிலைய குற்ற எண் 142/2026, பாரதீய நியய சன்கீதா பிரிவு 303(2) r/w 21(4) MMDR Act ன்** கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தடயப் பொருட்களாக இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 98/2026–ல் Item–1 JCB Excavator, JCB 140, Engine No. 95519198, Chassis No. PunJD 14AKS3558300**ஐ இடைக்காலமாக ஒப்படைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் /தடயபொருள் உரிமையாளர் தரப்பில் மேற்படி நபர் எந்தவொரு விதத்திலும் குற்றவாளி இல்லை என்றும், மரியாதைக்குரிய குடும்பத்தை சேர்ந்தவர் என்றும், நிரந்தர வசிப்பிடத்தை சேர்ந்தவர் என்றும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவார் என்றும், வழக்கு விசாரணைக்காலத்தில் வாகனத்தை தவறாமல் ஆஜர்படுத்துவார் என்றும், இது போன்ற குற்ற செயல்களில் ஈடுபடுத்தமாட்டார் என்றும், நிரூபண ஆவணம் மூலமாக மனுதாரர் தரப்பில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தரப்பு /எதிர்மனுதாரராகிய காவல் துறையினருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, பதில் பெறப்பட்டது. அவர்களது பதிலில் **தடயப் பொருளை** மனுதாரர் வசம் ஒப்படைத்தால் வழக்கு விசாரணைக்கு வரும்போது ஆஜர்படுத்தமாட்டார்

என்பதாலும் **மேற்படி தடயப்பொருளை** விற்கக்கூடும் என்பதாலும் மனுதாரர் வசம் **தடயப்பொருளை** திரும்ப ஒப்படைப்பதற்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் அடிப்படையிலும், அவர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுதாரரின் **தடயப்பொருளை** வைத்திருந்தால் எதிர்காலத்தில் அது பயனற்ற நிலைக்கு போய்விடும் என்றும், அதன் மறு மதிப்பு குறைந்து போய்விடும் சூழ்நிலை ஏற்படும் என்பதாலும் **மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் எதிர் குஜராத் மாநிலம்(2002(10)SCC253)வழிக்காட்டுதலின்படியும் மற்றும் Criminal Rules of Practice 2019 Rule 257(1) ன் படி** தடயப்பொருளை இடைக்கா**லமாக ஒப்படைப்பதே உசிதம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.**

முடிவில் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், தடயப்பொருளை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1) மனுதாரர் தடயபொருளுக்கான தற்போதைய மதிப்பிற்கு உரிய ஆவணங்களை சமர்பித்து அந்த மதிப்பிற்குரிய தலா இரு நபர் ஜாமீன்தாரை தகுந்த ஆவணங்களுடன் இந்நீதிமன்றம் ஏற்று கொள்ளும் வகையில் முன்னிறுத்த வேண்டும்.

2) மனுதாரர் மேற்படி தடயப்பொருளை விற்கவோ, உருமாற்றம் செய்யவோ, வேறு எந்த வகையிலோ அதன் தன்மையினை, தோற்றத்தினை மாற்றம் செய்யக்கூடாது.

3) மனுதாரர் மேற்படி தடயபொருளை இவ்வழக்கை போன்ற எந்தவொரு குற்ற செயல்களிலும், ஈடுபடுத்த கூடாது. அவ்வாறு ஈடுபடுத்த மாட்டேன் என்று பிரமாணபத்திரம் மூலமாக தாக்கல் செய்ய வேண்டும்.

4) மனுதாரர் மேற்படி தடயபொருளை இந்நீதிமன்றமோ, அல்லது விசாரணை நீதிமன்றமோ கேட்கும் போது, உடனடியாக எந்தவித காரணமும் சொல்லாமல் ஒப்படைப்பேன் என்றும் மேற்படி தடயபொருளை அரசுக்கு ஆதாயப்படுத்தும் நடவடிக்கைக்காக கேட்கும் போது உடன் எந்தவித காரணமும் சொல்லாமல் இந்நீதிமன்றத்திலோ, அல்லது விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது நீதிமன்றம் உத்தரவிடும் அதிகார வரம்பிடமோ ஒப்படைப்பேன் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.

5) மனுதாரர் பிரதி மாதம் 1வது வேலை நாளில் மேற்படி தடயபொருளை இந்நீதிமன்றத்தின் முன் முன்னிலைபடுத்த வேண்டும்.

6) மனுதாரர் புலன்விசாரணைக்கும், வழக்கு விசாரணைக்கும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும்,

7) மேற்படி நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டு மேற்படி தடயபொருளானது அரசுக்கு ஆதாயம் செய்வதற்கான நடவடிக்கை தொடங்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

8) மனுதாரர் தடயப்பொருளுக்கான **அசல் பதிவுச்சான்றிதழை** இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டும்.

**இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு (09.06.2026)ம் தேதி அவையறிய உத்தரவு பகரப்பட்டது.**

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.09 17:35:56 +0530

**நீதித்துறை நடுவர்**
**இரணியல்(கூ.மு.பொ.)**

Judicial Magistrate Court,
Eraniel

Court Seal

"The Parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date."